IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 332/2020

சாட்சி : PW1

பெயர் : ரங்கசாமி தேதி: 20-12-2023

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு டீச்சர் டிரெயினிங் படித்துள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரங்கள் தெரியும். பிரதிவாதி என்னுடைய அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதற்கு ஒரு பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த பதில் அறிவிப்பில் பிரதிவாதி என்னை யார் என்றே தெரியாது என்றும், என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், அதற்காக புரோநோட் ஏதும் எழுதி தரவில்லை என்று குறிப்பிட்டிருந்தார் என்றால் ஆமாம். பதில் அறிவிப்பிற்கு நான் ஒரு கூடுதல் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஆமாம். அதில் புரோநோட்டின் நகல் இணைத்து அனுப்பவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேட்டுப்பட்டி அரசு பள்ளியில் நான் ஆசிரியராக பணியாற்றி வந்தேன் என்பதற்கான எந்தவிதமான ஆவணங்களும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னிடம் உள்ளது. அந்த காலக்கட்டத்தில் 1ம் பிரதிவாதி அங்கு படித்து வந்தார் என்பதற்கான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி என் ஊர்க்காரர். 1ம் பிரதிவாதி கடை வைத்துள்ளார் என்பது சம்மந்தமான கடையின் பெயர் குறிப்பிடவில்லை என்றும், ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 18.04.2018 தேதி கடன் கொடுத்து 04.09.2020 ம் தேதி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். நான் சொன்ன தேதியில் ரூ. 10,00,000/- பணம் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால்

ரொக்கமாக அல்லது காசோலையாக அல்லது வரைவோலையாக கொடுத்தாக வழக்குரையில் கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த தேதியில் நான் ரூ. 10,00,000/– வைத்திருந்தது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் பிளாட் வாங்குவதற்காக பணம் வைத்திருந்தேன். தாவா புரோநோட் தவிர வேறு ஆவணங்களை நான் 1ம் பிரதிவாதியிடம் வாங்கவில்லை என்றால் ஆமாம். பணத்தை நான் கையில் வைத்திருந்தேன். வங்கி பாஸ் புக் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். பென்சன் வாங்கி வைத்திருந்தேன் என்பது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அந்த விவரத்தை முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை என்றால் ஆமாம். நான் 1ம் பிரதிவாதிக்கு கடன் கொடுக்காததால் தான் அந்த விவரங்களை வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி டிகிரி படித்துள்ளார். என்ன டிகிரி படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் உதவி தலைமை ஆசிரியராக பணியாற்றினேன். 1 முதல் 5 வகுப்பு வரை பாடம் நடத்தி வந்தேன். அந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி எந்த வகுப்பு படித்து வந்தார் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் கூறமுடியும். 1ம் பிரதிவாதி என்னிடம் எப்போதும் படிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த காலக்கட்டத்திற்கு பிறகு 1ம் பிரதிவாதி என்னிடம் படிக்கவில்லை என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி என் குடும்பத்திற்கு பழக்கம். அவர் படித்த காலத்தில் இருந்தே தெரியும். அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதி எங்கு படித்தார் என்று எனக்கு தெரியாது. அவர் எந்த கல்லூரியில் படித்தார் என்று எனக்கு தெரியாது. இதற்கு முன்னர் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வரவு செலவு இல்லை. 1ம் பிரதிவாதியின் கடையின் பெயர் என்னுடைய வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி மின் உபகரணப் பொருட்கள் கடை வைத்துள்ளதாக மற்ற நபர்கள் சொல்லிக்

கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எந்த சர்வே நெம்பரில் எவ்வளவு சொத்து உள்ளது என்று என்னுடைய பிரமாண பத்திரத்தில் கூறவில்லை என்றால் ஆமாம். நாசர் பாஷா என்பவரிடம் நஷ்டஈடு வழக்கிற்காக கொடுத்த பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டை வைத்து என்னை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், போர்ஜரியாக தயாரிக்கப்பட்ட புரோநோட்டை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதி கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வருமானவரி ரிட்டன் தாக்கல் செய்து வருகிறேன். அந்த வருமானவரி தாக்கல் செய்த கணக்குகளை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 1ம் பிரதிவாதி என்னிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றும், நான் அவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.